# தமிழ்ப்பேராய விருதுகள் 2025

## விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

திரு. இராமசாமி நினைவு (SRM) அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தமிழ்ப்பேராயம் 2012 முதல் ஒவ்வோர் ஆண்டும் சிறந்த தமிழ் நூல்கள், சிறந்த தமிழ் இதழ், சிறந்த தமிழ்ச்சங்கம், சிறந்த தமிழறிஞர் ஆகிய பிரிவுகளில் தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கி வருகின்றது. இந்த ஆண்டும் அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சிறந்த நூல்கள்**

1. புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது (சிறுகதை, புதினம், நாடகம்) - ₹1,00,000/- (ஓர் இலட்சம்)
2. பாரதியார் கவிதை விருது (கவிதை) - ₹1,00,000/- (ஓர் இலட்சம்)
3. அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது (கதை, கவிதை, நாடகம்) - ₹1,00,000/- (ஓர் இலட்சம்)
4. ஜி.யூ. போப் மொழிபெயர்ப்பு விருது (மொழிபெயர்ப்பு நூல்) ₹1,00,000/- (ஓர் இலட்சம்)
5. ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் அறிவியல்தமிழ் / தொழில்நுட்ப விருது (தமிழில் அறிவியல் / தொழில்நுட்ப நூல்) ₹1,00,000/- (ஓர் இலட்சம்)
6. முத்துத்தாண்டவர் தமிழிசை விருது (தமிழிசை சார்ந்த நூல்) ₹1,00,000/- (ஓர் இலட்சம்)
7. பரிதிமாற்கலைஞர் தமிழ் ஆய்வறிஞர் விருது (ஆய்வு நூல்) - ₹1,00,000/- (ஓர் இலட்சம்)
8. முத்தமிழ் அறிஞர் கலைஞர் சமூக நீதி விருது (தமிழ்ச் சமுதாய மேம்பாடு / சமூக நீதி தொடர்பான நூல்) - ₹1,00,000/- (ஓர் இலட்சம்)

**விருது பெறும் நூல்களின் பதிப்பாளர்களுக்கு ரூபாய் 20,000/- வழங்கப்படும்**

**சிறந்த தமிழ் இதழ்**

9. சுதேசமித்திரன் தமிழ் இதழ் விருது (தமிழ்க் கலை, இலக்கியப் பண்பாட்டு இதழ்) - ₹50,000/- (ஐம்பதாயிரம்)

**சிறந்த தமிழ்ச் சங்கம்**

10. தொல்காப்பியர் தமிழ்ச்சங்க விருது (ஓர் அமைப்புக்கு மட்டும்) - ₹50,000/- (ஐம்பதாயிரம்)

**சிறந்த கலைக்குழு**

11. அருணாசலக் கவிராயர் விருது (தமிழிசைக் குழு / நாட்டுப்புறக் கலைக்குழு) - ₹50,000/- (ஐம்பதாயிரம்)

**சிறந்த தமிழறிஞர்**

12. பாரிவேந்தர் பைந்தமிழ் விருது (தமிழ்ப் பேரறிஞர் - வாழ்நாள் சாதனையாளர்) ₹3,00,000/- (மூன்று இலட்சம்)

# விருது விதிகள்

- முதல் எட்டு விருதுகளுக்கும் உரிய நூல்கள் 2022, 2023, 2024 ஆம் ஆண்டுகளில் முதல் பதிப்பாக வெளிவந்திருக்க வேண்டும். 2025 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்கள் தகுதிபெறாது.
- விருதிற்கு நூல்கள் அனுப்புவோர் எந்த விருதிற்கு என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். அத்துடன் நூல்களின் 5 படிகள் இணைத்து அனுப்ப வேண்டும்.
- ஜி.யூ.போப் மொழிபெயர்ப்பு விருது தமிழின் சிறப்புகள், கலை, இலக்கியம், பண்பாடு முதலியவற்றை வெளிப்படுத்தும் தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நூலுக்கு வழங்கப்படும். இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட நூல் 5 படிகளையும் மூலநூல் 5 படிகளையும் அனுப்ப வேண்டும்.
- முத்துத்தாண்டவர் தமிழிசை விருதுக்கு அனுப்பப்படும் நூல்கள் தமிழிசை சார்ந்த ஆய்வு நூலாக இருக்க வேண்டும்.
- பரிதிமாற் கலைஞர் தமிழ் ஆய்வறிஞர் விருதுக்குப் பரிந்துரைக்கப்படும் ஆய்வு நூல் தமிழியல் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.
- முத்தமிழ் அறிஞர் கலைஞர் சமூக நீதி விருதுக்குப் பரிந்துரைக்கப்படும் நூல்கள் தமிழ்ச் சமுதாய மேம்பாடு / சமூக நீதி சார்ந்ததாக இருக்க வேண்டும்.
- தமிழ்க் கலை, இலக்கியம், பண்பாட்டிற்குப் பங்காற்றும் சிறந்த வார / மாத / காலாண்டு இதழ்களுக்குச் ‘சுதேசமித்திரன் தமிழ் இதழ் விருது’ வழங்கப்படும். குறைந்தது ஐந்தாண்டுகள் தொடர்ந்து இடைவெளியில்லாமல் வெளிவந்து கொண்டிருக்கும் இதழே விருதுக்குக் கருத்தில் கொள்ளப்படும். இதன் கடைசி 5 ஆண்டு இதழ்களின் தொகுப்புகள் 3 படிகள் அனுப்ப வேண்டும்.
- தமிழ்க் கல்வி, கலை, இலக்கியம், பண்பாடு முதலியவற்றிற்காகப் பாடுபடும் உலகத் தமிழ் அமைப்புகள் / பிற மாநிலத் தமிழ் அமைப்புகள் / தமிழ்நாட்டுத் தமிழ் அமைப்புகளுக்குத் ‘தொல்காப்பியர் தமிழ்ச்சங்க விருது’ வழங்கப்படும். இவ்விருதுக்குக் குறைந்தது 5 ஆண்டுகள் அமைப்பு பற்றிய குறிப்புகள், தொடர்ச்சியாகத் தமிழ்த் தொண்டாற்றியதற்கான ஆவணங்களை 3 படிகள் அனுப்புதல் வேண்டும். இவ்விருதுக்குத் தமிழகம், அயல் மாநிலம் மற்றும் அயல்நாடுகளைச் சேர்ந்த தமிழ் அமைப்பினர் விண்ணப்பிக்கலாம்.
- தமிழிசை / நாட்டுப்புறக் கலையில் சிறந்து விளங்கும் குழுவுக்கு அருணாசலக் கவிராயர் விருது வழங்கப்படும்.
- பாரிவேந்தர் பைந்தமிழ் விருதிற்கு விண்ணப்பிக்கப்படும் தமிழறிஞர்களின் தமிழ்ப் பணிகள், பெற்ற பட்டங்கள், எழுதிய நூல்களின் பட்டியல் போன்றவற்றை உள்ளடக்கிய முழுத் தகவல்களை விண்ணப்பக் கடிதத்துடன் அனுப்ப வேண்டும். இவ் விருதுக்கான விண்ணப்பத்தை உரியவரோ, மற்றவர்களோ அனுப்பலாம்.
- எந்த நாட்டைச் சேர்ந்த தமிழறிஞர்களும் மேற்கண்ட விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
- விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்படாத நூல்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி அளிக்கப்பட மாட்டாது.
- தமிழ்ப்பேராயத்தால் நியமிக்கப்படும் வல்லுநர் குழுவின் முடிவே இறுதியானது.
- விண்ணப்பங்களையும் நூல்களையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தலைவர், தமிழ்ப்பேராயம்,
518, ஐந்தாம் தளம், மைய நூலகக் கட்டடம்,
SRM அறிவியல் (ம) தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
காட்டாங்குளத்தூர் - 603 203.
செங்கல்பட்டு மாவட்டம்.
தொலைபேசி : 044 2741 7375 / 77 / 78.
மின்னஞ்சல்: tamilperayam@srmist.edu.in,

**விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்**
**15.06.2025**